தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1973 டிசம்பர் 4

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Shooting incident at Palavanatham village.

*35 *N. Q.*—THIRU K. T. K. TANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

whether the Police had resorted to firing in the Paluvanatham Village in Ramanathapuram district on or about 22nd September 1973 resulting in deaths and injuries ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். 1973 செப்டம்பர் 20-ஆம் நாளன்று பழவநத்தம் என்னும் கிராமத்தில் கலகக் கூட்டம் ஒன்றின் மீது காவலர் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் ஒருவர் இறந்தார். பத்து பேர் காயமுற்றனர். காவலர் தரப்பில் காவல்துறை டெபுடி சூப்பரின்டென்டென்ட் உட்பட ஒன்பது பேருக்குக் கல்வீச்சினால் காயம் ஏற்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்தப் பழவநத்தம் கிராமத்தில் ஏதோ ஒரு பஸ் தகராறு ஏற்பட்டு இப்படித் துப்பாக்கிப் பிரயோகம் ஆனதே, அந்தப் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பிறகு ஐ.ஜி. அவர்களே அங்கு சென்றார்கள். இப்பொழுது ஏதாவதொரு விசாரணை—நீதி விசாரணையோ, டிபார்ட்மெண்ட் விசாரணையோ அங்கு நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு பஸ்ஸை வளைத்துக்கொண்டு அந்தக் கிராம மக்கள் கலவரத்தில் ஈடுபட்டதன் காரணமாகவும், அந்தப் பஸ்ஸிலேயிருந்து

கண்டக்டரை வளைத்துக்கொண்டு வன்முறையில் ஈடுபட்டதன் காரணத்தாலும், அங்கே போலீசார் பல்வேறு எச்சரிக்கைகளுக்குப் பிறகு துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு, அதன் காரணமாக ஒருவர் இறந்தார். அதற்குப் பிறகு இப்பொழுது மாஜிஸ்ட்ரேட் அளவிலே விசாரணை அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இதே பழவநத்தத்தில்தான் சென்ற ஆண்டு ஜூலை 5-ந் தேதி போலீஸ் லத்தி சார்ஜில் ஒருவர் இறந்துவிட்டார். இப்பொழுது போலீசாருக்கும் கிராமத்திலுள்ள மக்களுக்கும் முரண்பாடு இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, அம்மாதிரியாக போலீசார் ஒருதலைப் பட்சமாக, ஏதும் செய்யாமலிருப்பதாகச் சொல்கிறார்களே, அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் தகராறே, உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் கேட்டதுபோல, அந்த பஸ்காரர்களுக்கும் கிராம மக்களுக்கும் ஏற்பட்ட தகராறின் அடிப்படையில்தான் தோன்றியது. ஆகவே, போலீசார் இதிலே ஒருதலைப் பட்சமாக இருந்தார்கள் என்பதற்கு இந்த வழக்கைப் பொறுத்த வரையில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லை.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவர் அவர்களே, போலீசை வளைத்துக்கொண்டு கிராம மக்கள் வன்முறையில் ஈடுபட்டதற்கும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதாக நான் அறிகிறேன். எனவே, நீதிபதி விசாரணை மூலமாக இதைப்பற்றிய உண்மையை அறிய அரசு முன்வருமா? அல்லது, டிபார்ட்மென்ட் மூலமாகவாவது தனி விசாரணை ஒன்றை ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கிராம மக்களே சி.ஐ.டி. விசாரணையென்று தேவை என்று மனு அனுப்பியிருக்கிறார்கள். இப்பொழுது மாஜிஸ்ட்ரேட் அளவில் விசாரணை நடைபெற்று 12 சாட்சிகள் வரையில் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். சி. ஐ. டி. வைத்து விசாரிக்க இயலுமா என்பதை சட்ட இலாக்கா பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

1973 டிசம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினு எண்கள் 599, 600, 601, 602 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

ஓமியோபதிக் குழு

* 603 **வினு—திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி கௌன்சில் நமது நாட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ளதா?

(இ) அந்தக் கௌன்சிலில் அங்கம் வகிக்கும் நபர்களுக்கு இருக்க வேண்டிய Qualifications யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) ஆம்.

(இ) இந்தக் குழு உறுப்பினர் பதவிக்குரிய தகுதிகள் பின் வருமாறு:—

(1) தமிழ்நாட்டில் சாதாரணமாக வசிப்பவராயிருக்க வேண்டும்;

(2) அவர் கடன் தீர்க்க சக்தியற்றவரென்று தீர்ப்பளிக்கப் படுவதற்காக விண்ணப்பித்துக்கொண்டவராகவோ கடன் தீர்க்க சக்தியற்றவர் என்ற நிலையிலிருந்து விடுவிக்கப்படாத கடனாளியா கவோ இருக்கக்கூடாது;

(3) சித்த சுவாதீனமுள்ளவராக இருக்க வேண்டும்;

(4) குற்ற வழக்குகள் நீதிமன்றத்தால், ஒழுக்கக்கேடு சம் பந்தப்பட்ட ஒரு குற்றத்திற்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வராக இருக்கக் கூடாது;

(5) குழுவில் ஊதியம் பெறும் ஊழியராக இருக்கக் கூடாது;

(6) இருபத்தைந்து வயது நிரம்பியவராயிருக்கவேண்டும்;

(7) அரசு நியமிக்கக் கூடிய மூன்று அதிகாரிகள் தவிர மற்றவர்கள் பதிவு பெற்ற மருத்துவராயிருக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஹோமியோபதி கவுன்சிலில் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற அதிகாரிகளே இருக்கிறார்களே, பொதுவாக யுனிவர்சிடி போன்றவற்றின் குழுக்